[1983 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினரின் உணர்வுகளைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, பால் கன்ஸ்யூமர் சொஸைடிகள், நுகர்வோர் சங்கங்கள் எல்லா இடங்களிலும் அமைக்கப்படுகின்றன. கோவை, ஈரோடு போன்ற பெரிய நகரங்களில் உற்பத்தியாளர்கள் ஒன்றியமே விநியோகத்தையும் மேற்கொள்வதைப்போல பெரிய இடங்களிலே தலைநகரங்களிலும் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களே விநியோகத்தையும் மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே உபயோகிப்போருடைய கூட்டுறவு சங்கத்த தமிழ்நாடு முழுவதும் விரிவு படுத்த வேண்டும் என்பதுதான் அரசினுடைய கொள்கை. ஆனால் முதல் கட்டமாக சென்னை நகரத்திலே பரீட்சார்த்தமாக செய்து வருகிறோம். சென்னை நகரத்திலே இதுவரையிலே 15 இடங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். ஏறக்குறைய 100 இடங்களில் சென்னையிலே இதை ஏற்படுத்தி தன்னிறைவைப் பெற முடிகிறதா என்றும் செயல்படுகின்ற தன்மையைப் பார்த்த பிறகும் விரிவுபடுத்துவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

டான்சி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங்கள்.

*வினா எண். 243—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி (TANSI) நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங்களில் மார்ச் 82 முடிய கடனை முழுவதும் செலுத்தாத நிறுவனங்கள் யாவை ?

(ஆ) அவைகளின் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) டான்சி நிறுவனம் பொதுத் துறையில் சிறு தொழில்கள் சிலவற்றை நடத்தி வருகிறது. இந்நிறுவனம் மற்ற நிறுவனங்களுக்கோ, நபர்களுக்கோ கடன் அளிப்பதில்லை.

[1983 பிப்ரவரி 15

[முற்பகல் 9—30]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி நிறுவனத்தின் மூலம் கடன் பெற்ற நிறுவனங்கள் கடனை திருப்பிச் செலுத்துவதில் என்ன சிக்கல் இருக்கிறது? கடன் பெற்ற நிறுவனங்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

உதகமண்டலத்தில் மாவட்ட தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம்

*வினா எண். 284—திரு. கே. உச்சி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த உதகமண்டலத்தில் மாவட்ட தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் பணி எப்போது முடியும்?

(ஆ) அங்கு எந்தெந்த உபபொருட்கள் தயாரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற்பொழுது கோயம்புத்தூர் மாவட்டத் தொழில் மையம் நீலகிரி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை கவனித்து வருகிறது. ஆகவே தொழில் மையத்திற்கான கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தில் கலர் பிலிம் தயாரிக்கும் பிரிவு அங்கே இல்லை என்ற நிலை ஏற்படும்போது, அதை மீண்டும் ஏற்படுத்தவேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்றும், அதற்கான உப பொருள்களை அங்கே தயாரிக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இது ஏற்கனவே விவாதிக்கப்பட்ட பிரச்னை. ஆனால், ஏற்கனவே இருக்கின்ற இந்துஸ்தான் புகைப்பட பிலிம் நிறுவனத்திற்கு அருகே ஒரு துணை தொழிற்பேட்டை அமைக்கப்பட்டு, அதை விரைவிலே அங்கே தொடங்கயிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் காரணமாக 10 தொழிற்கூடங்கள் அங்கே அமைய இருக்கின்றன. ஏற்கனவே இருக்கின்ற தொழிலுக்கு, இவைகள் துணைத் தொழிற்கூடங்களாக அமையும்.